DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC. No. 700/ 2025 |
| Deposition of witness | : | PW-2 |
| List of witness | : | A.W.2 |
| Name | : | சரவணபவகுமார் |
| Father's /Husband Name | : | ராஜன் |
| Village | : | பேரளம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 56 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் பேரளம் காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day March 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பேரளம் காவல் நிலைத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.04.2024-ம் தேதி 16.30 மணிக்கு நான் தலைமைக்காவலர் ரவீந்தர் மற்றும் இரண்டாம் நிலைக்காவலர் ராம்குமார் என்பவருடன் தேர்தல் பாதுகாப்பு அலுவலாக தேர்தல் தொடர்பான குற்றங்கள் சம்பந்தமாக கண்காணித்து வந்த போது கடுவங்குடி பகுதியில் சி.பி.ஜி காம்ப்ளக்ஸ் சுவற்றில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் காலகட்டத்தில் தேர்தல் நடத்தை விதிகளை மீறி அ.இ.அ.தி.மு.க கட்சியின் இரட்டை இலை சின்னங்களை சட்டத்திற்கு புறம்பாக பொது அழகை கெடுக்கின்ற விதமாக வரையப்படடிருந்தது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டி விசாரித்து இவ்வழக்கின் எதிரியான அன்பழகன், த/பெ. கணேசன், கடுவங்குடி, நன்னிலம் தாலுக்கா என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நிலையம் வந்து எதிரி மீது பேரளம் காவல் நிலைய குற்ற எண். 186 / 2024 சட்டப்பிரிவு 4 (1) தமிழ்நாடு திறந்த வெளி அழகை கெடுத்தல் தடை சட்டத்தின்படி நான் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு, காவலர் சாட்சிகள் ரவீந்தர், மற்றும் ராம்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன் இவ்வழக்கின் எதிரி அன்பழகனை கைது செய்து நிலைய ஜாமீனில் விடுவித்தேன். இத்துடன் புலன் விசாரணை முடித்து கடந்த 22.04.2024-ம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவு 4 (1) தமிழ்நாடு திறந்த வெளி அழகை கெடுத்தல் தடை சட்டத்தின்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

நான் சொன்ன நாள் நேரத்தில் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றாலும், நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் புகார்தாரர் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த அனைவரும் ஒரே அதிகாரி என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.